**சாட்சியின் வாக்குமூலம்**

பாகம் 111 சுற்றிக்கை உத்தரவு 11 உ.வி.மு.ச.பிரிவு - 1 மற்றும் உ.வி.மு.ச

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**அசல் வழக்கு எண்.46/2008**

**பி.வா.சா.1**

| | | |
|---|---|---|
| சாட்சியின் பெயர் | : | ரஉறீமா பீவி |
| கணவர் பெயர் | : | முகமது இப்ராஉறிம் |
| வயது | : | 60/2024 |
| தொழில் | : | |
| மதம் | : | |
| ஜாதி | : | |
| கிராமம் | : | வேடசந்தூர் |
| தாலுகா | : | வேடசந்தூர் |
| மாவட்டம் | : | திண்டுக்கல் |

1873ன் வருடத்திய வகைமுறை சட்டம் பிரிவு 10ன் படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி வரை செய்யப்பட்டு 05.08.2024ம் தேதி என்னால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரத்தை வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை. என்னுடைய வீடு, இடம் வடபுறம் உள்ளது. வாதியின் வீடு, இடம் தென்புறம் உள்ளது. இருவருக்கும் தனித்தனியாக பட்டா உள்ளது. வாதி தன்னுடைய தாவா சொத்தில் வடபுறத்தில் சுவர் வைப்பதற்கு எவ்வித ஆட்சேபனையும் உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது. என்ன ஆட்சேபனை உள்ளது என்றால் வாதிக்கு கொடுக்கப்பட்ட பட்டா இடத்தில் என்னுடைய 6அடி நிலம் உள்ளது என்பதால் ஆட்சேபனை செய்கிறேன். பி.வா.சா.2 வது ஆவணமான பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.2 ஆவணமான பட்டாவில் உள்ள நிலப்படி உரிமை உள்ளதா என்றால் 6அடி கூடுதல் இடம் உள்ளது. வாதிக்கும் எனக்கும் கொடுக்கப்பட்ட 1990, 1991 வருடத்திற்குரிய பட்டாக்களை பொறுத்தும், அதில் உள்ள விஸ்தீரணங்களை பொறுத்தும் எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.2 ஆவணத்தில் வரையப்பட்டிருக்கும் படம் என்ன என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் அது முக்கோண வடிவில் உள்ளது. பி.வா.சா.1 ஆவணமான தானசெட்டில்மெண்ட் பத்திரம் 25.11.1988ன்படி எனக்கு ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆனதிலிருந்து அதில் உள்ள சொத்து விபரம் எனக்கு தெரியும். தற்போது வரை எனக்கு எழுதி கொடுக்கப்பட்ட சொத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே முக்கோண வடிவில் தான் உள்ளது. என்னுடைய எதிர் உரையில் குறிப்பிட்டுள்ள உதுமான் பீவி, மைமூன் பீவி, ஆயிஷா பீவி ஆகியோர்கள் பெயரில் உள்ள பட்டாவோ,

பத்திரமோ தாக்கல் செய்யவில்லை என்றால் அதை பற்றிய விபரம் எனக்கு தெரியாது. என்னுடைய எதிருரையில் உள்ள 5 வது பத்தியில் எனது கொள்ளு பாட்டியான உதுமான் பீவிக்கு கிழமேல் 32 அடி, தென்வடல் 52 அடி சுயராஜ்ஜியமாக பாத்தியப்பட்ட சொத்து என கூறியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது. தானசெட்டில் மெண்ட் பத்திரமான பி.வா.சா.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தில் கிழமேல் 32 அடி, தென்வடல் 52 அடி கூடுதலாக விஸ்தீரணம் காட்டப்பட்டு மேற்கண்ட ஆவணம் உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ஆவணமான தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. கிழமேல் 32 அடி, தென்வடல் 52 அடி என்பது சதுரவடிவ அமைப்பான நிலமாகும் என்றாலும் கூம்பு வடிவில் உள்ள நிலத்தை சதுர வடிவ நிலமாக உள்ளது போல் பொய்யான விஸ்தீரணம் காட்டி பி.வா.சா.2 ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. தாவா பழைய சர்வே எண் 694/A/2A1A1 அதற்குரிய புதிய சர்வே எண் 1975/20 க்கு கட்டுப்பட்ட நிலம் நத்தம் புறம்போக்கு வகைப்பாட்டை சேர்ந்தது என்றால் எனக்கு தெரியாது. அரசாங்கத்தால் வாதிக்கு கொடுக்கப்பட்ட பட்டா இடத்தில் வடபுறத்தில் சுவர் எழுப்புவது ஆட்சேபிக்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பட்டாவில் தென்புறத்தில் சுவர் எழுப்புவதற்கு வாதிகள் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதி படி வாதிகள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றாலும், பி.வா.சா.1 ஆவணமான தானசெட்டில்மெண்டை பொய்யாக உற்பத்தி செய்து, பொய்யாக பாத்தியம் கொண்டாடி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய இடத்தில் தென்புறம் வாதிகள் ஆக்கிரமிப்பு செய்து பாத்ரூம் கட்டியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் சுவர் எழுப்புவதில் எவ்வித உரிமையும் எனக்கு கிடையாது என்பதாலும், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
G ASHOK PRASATH

**Principal District Munsif**
**Vedasandur**